பக்கங்கள் 21+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 01 வியாழக்கிழமை 17.07.2025 | அதிர்வு 341

## வவுனியாவில் ரயிலில் மோதி ஒருவர் மரணம்

(கி.வசந்தன்)

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதுண்டு நேற்று இரவு ஒருவர் பலியாகியுள்ளார். 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அர்ச்சுனா - தவிசாளர்கள் இன்று கடும் வாக்குவாதம்

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 05



# செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டி கொழும்பில் இன்று பெரும் போராட்டம்

## பேரணியாகச் செல்ல முயன்ற வேளை பொலிஸார் தடுத்ததால் குழப்ப நிலை




யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பில் இன்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச் செல்ல முயன்ற வேளை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் குழப்ப நிலை ஏற்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நீதிக்கான மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பெருமளவானவாகள் கலந்துகொண்டிருந்தனர்.

"செம்மணி உட்பட அனைத்து புதைகுழிகளுக்குமான நீதிக்கான குரலைப் பலப்படுத்துவோம். ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதை உலகுக்குக் கூறுவோம். சர்வதேச தரத்திலான அகழ்வுப் பணி மட்டுமல்ல நீதிக்கான சர்வதேசத்தின் தலையீட்டையும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவும் ஓங்கிக் குரல் எழுப்புவோம்." – என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள், "புத்த தேசமா? புதைகுழிகள் தேசமா? செம்மணியில் எலும்புகளாக எம்மவர்கள்... சர்வதேசமே தமிழர்களை ஏமாற்றாதே!, போர்க் குற்றத்தின் சாட்சி செம்மணி, வடக்கு, கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து" போன்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டக்காரர்கள் முன்னோக்கிப் பேரணியாகச் செல்ல முயன்ற வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்

போராட்டக்காரர்கள் தங்களை முன்னோக்கிச் செல்வதற்கு அனுமதிக்குமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்த போதிலும் பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் முன்னோக்கி நகர முற்பட்ட வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தியதால் குழப்ப நிலை ஏற்பட்டது.













# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்: தேவையற்ற விடயங்கள் பேசப்பட்டதே அதிகம்

## அமைச்சர் சந்திரசேகர் கவலை

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைலையில் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் இன்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலாகவே இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் , கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன், எஸ்.ஶ்ரீபவானந்தராசா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், க.இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வீதி அவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்குவரத்து, மின்சாரம், வீடமைப்பு, சட்டம் ஒழுங்கு, கடற்றொழில், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பல்வேறு விடயங்களுக்கு நக்கல், நையாண்டி கலந்து பதிலளித்துக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அதையடுத்துக் கூட்ட முடிவின் போது, “யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பேசப்பட்டமை குறைவு. தேவையற்ற விடயங்கள் பேசப்பட்டதே அதிகம். இப்படியான கூட்டம் இதுவே கடைசியாக இருக்க வேண்டும்.” – என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.









# இந்த அரசுக்கு எதிராக அரச அதிகாரிகள் வெகுவிரைவில் வீதியில் இறங்குவார்கள்

## இப்படிச் சொல்கின்றார் நாமல் எம்.பி.



அரச அதிகாரிகள் இந்த அரசுக்கு எதிராக வெகுவிரைவில் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த அரசு செயற்படுகின்றது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நடுத்தர மக்களை பாதுகாப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று நடுத்தர மக்களின் தொழில் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் அரசு செயற்படுகின்றது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு விவகாரம் மற்றும் கொள்கலன் விடுவிப்பு விவகாரத்தில் அரசின் முறைகேடான செயற்பாடு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அரச சேவையாளர்கள் அரசுக்கு எதிராக வெகுவிரைவில் குரல் எழுப்புவார்கள். அவர்கள் வீதியில் இறங்கி இந்த அரசுக்கு எதிராகப் போராடுவார்கள்.

அரச சேவையை வினைத்திறனாக்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அந்தச் சேவையை அரசியல் மயப்படுத்தும் வகையில் அரசு செயற்படுகின்றது. அரசின் செயற்பாடுகளை மக்கள் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாகச் செயற்பட்ட ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது. இவ்விருவரும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகச் சந்திப்புக்களை நடத்தினார்கள்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயத்தின் உண்மையைக் கத்தோலிக்கச் சபை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாக அரசு குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது. தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட பொய்களுக்கு முடிவு அப்போதுதான் கிடைக்கும்." – என்றார்.

# வவுனியா அமைதியின்மை தொடர்பில் கைதான இருவருக்கும் விளக்கமறியல்




(கி.வசந்தன்)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் வீழ்ந்து மரணமடைந்திருந்தார்.

அந்த மரணத்துக்கு அந்தப் பகுதியில் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்நிலையில், மரணித்தவர் மாரடைப்புக் காரணமாக மரணித்தார் என்று சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்காக இருவரை அழைத்திருந்தனர்.

அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்களைக் கைது செய்து வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவர்கள் இருவரையும் எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் சில நபர்களைக் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் ஒருவர் தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அடுத்த தேர்தலில் அநுர அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்போம்!

## அடித்துக் கூறுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

"மக்கள் வழங்கிய ஆணையை உதாசீனம் செய்யும் வகையில் அநுர அரசு செயற்படுகின்றது. எதிர்வரும் தேர்தலில் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்போம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு நேற்று புதன்கிழமை வழக்கு விசாரணைக்காகச் சென்றதன் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"திருடர்களைப் பிடிப்பதற்கும், ஊழல் - மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஊழல் எதிர்ப்புக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஊழல் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை அச்சுறுத்துவதாயின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். நீதிமன்றம் சுயாதீனமான முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஊழல்வாதிகளைப் பிடிப்பதாக இந்த அரசு தேர்தல் பரப்புரை மேடைகளில் குறிப்பிட்டது. பல பில்லியன் ரூபா மோசடி செய்தவர்கள் உள்ளார்கள். அந்த வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை முடக்குவதாகக் குறிப்பிட்டார்கள், உகண்டாவில் இருந்து நிதியைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று அவற்றை மறந்து விட்டு பிரதான எதிர்க்கட்சியை முடக்கும் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள்.

நாடாளுமன்றத்துக்குள்ளும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசு பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு மேற்கொள்கின்றது. அரசின் முறைகேடான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் போது அந்த முறைகேடுகள் குறித்து ஆராயாமல் முறைப்பாடுகளை முன்வைக்கும் தரப்பினர் இன்று இலக்கு வைக்கப்படுகின்றார்கள்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளை ஸ்தாபிக்கும் போது கட்சியின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்ட கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு எமது கட்சி ஒத்துழைப்பு வழங்குவதாக ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

எதிர்வரும் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் நாங்கள் எவ்வாறு தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால், எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அரசு தீவிர அவதானம் செலுத்தியுள்ளது."

– என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அர்ச்சுனா - தவிசாளர்கள்...

இதன்போது உள்ளூராட்சி சபைகள் முறையாக கழிவகற்றலை மேற்கொள்ளவில்லை எனவும், வீதிகளில் கழிவுகள் குவிந்து கிடக்கின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், கழிவுகள் வீதிகளில் இருக்கின்றன எனப் பொதுவாகக் கூறாமல் எந்தெந்த இடங்களில் கழிவுகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுமாறு உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் பதில் வழங்கிய நிலையில் உள்ளூராட்சி சபைகள் ஊழல் பேர்வழிகள் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறியதால் சபையில் குழப்பம் நிலவியது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறிய வார்த்தையை மீளப் பெற வேண்டும் என்று உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் ஒருமித்து தமது எதிர்ப்புக்களை வெளியிட்டனர்.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. சுமார் ஐந்து நிமிடங்களுக்கு மேல் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அவையை அமைதிப்படுத்தி தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றார்.

### வவுனியாவில்...

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு தபால் ரயிலிலேயே மேற்படி நபர் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# நாடாளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்களுக்கு ஏன் முறையாக ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை?

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சிறீதரன், அர்ச்சுனா எம்.பிக்கள் கேள்விக்கணை

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு முறையாக ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இ.அர்ச்சுனா ஆகியோர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மக்கள் பிரதிநிதிகளாக உள்ள உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களுக்கு ஆசனங்கள் பின்னால் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும், இது தொடர்பில் அரச அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கவனம் எடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற இ.அர்ச்சுனா, "ஏனைய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் மேடையில் ஒதுக்கப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் மட்டுமே வேறு மாதிரியாக ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில், "அரச நெறிமுறைகளின் பிரகாரமே ஆசனங்களை ஒதுக்கியுள்ளோம்." – என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் இ.சந்திரசேகர் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட நடைமுறையே இப்போதும் பின்பற்றப்படுகின்றது. அதனை மாற்ற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தால் அதனை நடைமுறைப்படுத்த நான் தயார். அடுத்த அமர்வில் உள்ளூராட்சி தவிசாளர்களின் ஆசனம் தொடர்பில் கவனம் எடுக்கப்படும்." – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிறப்பு வீதம் வீழ்ச்சி

இலங்கையின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. நாட்டின் தற்போதைய பிறப்பு விகிதம் நூற்றுக்கு 1.9 ஆக உள்ளது. எனினும், இந்த எண்ணிக்கை 2.1 ஆக இருக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

வேறு புள்ளி விவரங்கள் இலங்கையின் பிறப்பு விகிதம் குறைவடைந்துள்ள போதிலும் அதில் ஏற்ற இறக்கம் இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றன.

ஆயிரம் பேருக்கு என்ற கணக்கில் 2022 இல் 12.4 என்ற கணக்கிலும், 2023 இல் 11.2 என்ற கணக்கிலும், 2024 இல் 14.39 என்ற அளவிலும், 2025 இல் 14.24 என்ற அடிப்படையிலும் பிறப்பு வீதம் பதிவானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளம் தலைமுறையினர் குழந்தை பெறுவதை ஒத்திவைப்பதாலேயே, இலங்கையில் பிறப்பு வீதம் கடுமையாகச் சரிந்து வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின், 2025 உலக சனத்தொகை அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு இலங்கையில் 325,000 பேர் பிறந்துள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை 2023ஆம் ஆண்டில் 247,000 ஆகக் குறைவடைந்துள்ளது. 2024 இல் 228,000 ஆகியுள்ளது.

இதே சமயம் கர்ப்பம் தரிக்கும் பெண்கள் பாதிப்புறும் வீதமும் கரிசனைக்கு உரியதாகி இருக்கின்றது.

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 313,000 பெண்கள் கர்ப்பமடைகின்றார்கள், ஆனால் இந்த கர்ப்பங்களில் கணிசமான எண்ணிக்கையிலானவை ஆரோக்கியமான பிரசவங்களை விளைவிப்பதில்லை என்பதை புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரியின் கூற்றுப்படி, கர்ப்பத்தின் முதல் சில மாதங்களுக்குள் ஏறத்தாழ 26,000 பெண்கள் தங்கள் கருக்களை இழக்கின்றனர், அதே நேரத்தில் சுமார் 1,700 குழந்தைகள் 28 வாரங்களுக்குப் பிறகு கருப்பையிலேயே இறக்கின்றன.

கர்ப்ப சிக்கல்கள், முன்கூட்டிய பிறப்புகள் மற்றும் குழந்தை இறப்பு அதிகரித்து வரும் விகிதங்களை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து இப்போது அதிகம் வலியுறுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 280,000 நேரடி பிறப்புகளில், ஏறத்தாழ 20,000 குழந்தைகள் குறைந்த பிறப்பு எடையுடன் பிறக்கின்றன. பலருக்கு தீவிர மருத்துவ சிகிச்சை தேவைப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக, பல்வேறு உடல்நல சிக்கல்கள் காரணமாக சுமார் 2,500 குழந்தைகள் தங்கள் முதல் வருட வாழ்க்கையை வாழவில்லை என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

குழந்தைகள் பிறப்பு விகிதப் பாதிப்பு தொடர்பாக பல்வேறு காரணங்களை மருத்துவ - சுகாதாரத் துறையினர் சுட்டுகின்றனர். எது, எப்படியாயினும் ஆரோக்கியமான - வளமுள்ள - சுபீட்சம் மிக்க - ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் இந்தப் பின்னடைவுகளை விரைந்து சரி செய்ய சமுதாய மட்டத்தில் தீர்வுகள் காணப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.



# நிறுத்தப்பட்டுள்ள இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை!

## இன்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது

(அபு அலா)

நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கோரி மொரவெவ பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று (17) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை, மொரவெவ பிரதேச செயலகத்தில் இன்று (17) பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவிருந்த நேரத்தில், மாவட்ட செயலகத்தால் நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரதேச செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல வருட காலமாக மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவில் இடமாற்றம் கிடைக்காமல் பலர் இருக்கின்றனர். இந்த நிலையில் சிலர் நகர் பகுதியில் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக இவ் இடமாற்றத்தை நிறுத்தியுள்ளனர்.

முறையான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கோரி "அரசே இடமாற்றத்தில் இடம்பெறும் பாராபட்சங்களை நிறுத்து", "நியாயமான வருடார்ந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்து", "இடமாற்றத்தில் தொழிற்சங்கத்தின் ஒருதலைபட்ச தலையீட்டை நிறுத்து" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன உட்பட அதிகாரிகளை உள்ளே செல்ல விடாமல் தடுத்து தமக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்தை நடத்துவதற்கு இடமளிக்குமாறும் தங்களுடைய கோரிக்கைக்குச் சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவதாகவும், இது தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவார் என்றும் கலைந்து சென்றனர்.ள

அத்துடன் நேற் று தினம் (16) கோமரன்கடவல பிரதேசத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கோரி வாயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



# இலங்கை துறைமுகத்துவார இழுவை பாதை சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை!

## வெருகல் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குகதாசன் எம்.பி.



(ஹஸ்பர் ஏ.எச்)

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் இலங்கைத் துறைக்கும் இலங்கைத்துறை முகத்துவாரத்துக்கும் இடையில் உள்ள ஏரியில் நடத்தப்பட்டு வந்த இழுவைப் பாதை சேவையானது இடைநிறுத்தப்பட்டு நீண்ட காலமாகியும் மீளத் தொடங்கப் படவில்லை. இதனால் பள்ளி மாணவர்களும் பயணிகளும் மிகுந்த போக்குவரத்து சிக்கலை எதிர் கொள்கின்றனர்.

இதனைத் தீர்க்கும் பொருட்டு மேற்படி இழுவைப் பாதை சேவையை உடனடியாக மீளத் தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று (17) இடம் பெற்றது. இதன்போது தனது பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் இன்மையால் இங்கு வாழும் மக்கள் எரிபொருள் நிரப்புவதற்கு 20-25 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது .

இந்தச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் பொருத்தமான இடத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையத்தை வெருகல் பிரதேச சபை நிறுவ ஒப்புதல் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வாகனப் புகைப் பரிசோதனை நிலையம் இன்மையால் இங்கு வாழும் மக்கள் வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை மேற்கொள்வதற்காக 20-25 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது .

இந்தச் சிக்கலை தீர்க்கும் பொருட்டாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் பொருத்தமான இடத்தில் வாகனப் புகைப் பரிசோதனை நிலையம் ஒன்றை வெருகல் பிரதேச சபை நிறுவ ஆவன செய்தல்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் இல்லை. இதனால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே பதிவாளரை நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்.

இலங்கைத் துறை முகத்துவாரம் புன்னையடிப் பாலம் அமைக்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் கிராமத்தில் மீன்பிடித்துறை நிறுவ ஆவன செய்ய வேண்டும்.

வெருகல் மற்றும் சேருவில பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளை தெளிவாக அடையாளப்படுத்த ஆவன செய்தல்.

கல்லரிப்பில் இருந்து வெருகல் விவசாயிகளின் வயல்களுக்கு நீர் வழங்க ஆவன செய்தல்.- என்றார்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்குத் தொடரும் மறியல்!



(மன்னார் நிருபர்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட நீதிவான் இன்று (17) வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) மற்றும் இந்த மாதம் 01 திகதி அதிகாலை ஆகிய நாள்களில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளுடன் 15 இந்திய மீனவர்களைக் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களை இழுவைப் படகுகளுடன் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்

இந்த நிலையில் இந்த வழக்கு இன்று வியாழக்கிழமை (17) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இதன்போது 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# 789 வழித்தட தனியார் பஸ் வட்டுக்கோட்டையில் விபத்து!



பயணிகளை ஏற்றி வந்த 789 வழித்தட தனியார் பஸ் யாழ். வட்டுக்கோட்டை சந்திக்கு அருகாமையில் வயலுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று (17) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் கார் – ஓட்டோ விபத்தில் நான்கு பேர் காயம்





(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் கார் மற்றும் ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை டிரேட்டன் பகுதியில் கார் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகி கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று (17) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கார் கொழும்பில் இருந்து நுவரெலியா பகுதியை நோக்கி பயணித்த ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# பட்டிருப்பு வலய மாணவர்களுக்கான ஸ்மார்ட் வகுப்பறை நிகழ்நிலை கற்றல்!




பட்டிருப்பு வலயம் நகர்ப்புறம் சார்ந்த பகுதிகளைவிட தொலை தூர கிராமப் புறங்கள் அதிகமாகவும் பின்னடைவான பகுதிகளாகவும் இருப்பதால் சமமான கல்வி வாய்ப்புக்காக மாணவர்கள் அங்கலாய்க்கும் நிலையே உள்ளது.

பிரதானமாக கணித விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் பெருமளவு பற்றாக்குறையாக உள்ளனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கணித விஞ்ஞான ஆசிரியைகள் இல்லாத பத்து இடைநிலை பாடசாலைகளை நிகழ்நிலை டிஜிட்டல் முறையில் இணைத்து ஸ்மார்ட் பலகையூடாக கற்றல்கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள திட்டம் முன்வைக்கப்பட்டது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் ரட்ணம் நிறுவனமும் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கான நிதிப்பங்களிப்பை தமது பெற்றோர் டாக்டர் பிரக்மன், விஜய லக்ஷ்மி சிவப்பிரகாசபிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக திருமதி தர்ஷனா சிவா நல்கியுள்ளார்.

இதன்படி தெரிவுசெய்யப்பட்ட பத்து பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் டிஜிட்டல் பலகைகள் வழங்கப்பட்டன.

நிகழ்நிலை கற்றலுக்கான நிலையத்துக்கும் ஒரு ஸ்மார்ட் பலகை வழங்கப்பட்டது. வளவாளர்களாக கணித, விஞ்ஞான துறை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பத்து பாடசாலை மாணவர்களுக்குமான பொது நேரசூசியின் மூலம் தரம் 10,11 மாணவர்கள் நான்கு மணிநேர நிகழ்நிலை கற்றல் கற்பித்தலில் இணைக்கப்படுகின்றனர்.

இதன் பலனாக ஆயிரத்துக்குக் குறையாத மாணவர்கள் பயன் பெறுவதுடன் இருபது கணித விஞ்ஞானத் துறை ஆசிரியர்களது பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு ஒரே விதமான ஆசிரியர்களது கற்பித்தல் அனுபவத்தை மாணவர்கள் பெறுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு வலயக் கல்வித் திணைக்களத்தில் அமைந்துள்ள ஸ்மார்ட் ஆசிரிய வள நிலையத்தில் இந்தத் திட்டம் சிறப்பாகத் தொடக்கி வைக்கப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் சிறீதரன், ஐ.எம்.ஓ.எச். பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், ஐ எம். ஓ. எச் கிழக்குமாகாண இணைப்பாளர் பிரதீப்காந், மற்றும் பாடசாலை அதிபர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் பங்குபற்றினர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்ற ஆடிப்பிறப்பு!






கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா நேற்று (16) புதன் கிழமை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவியும் கலைக்கோவில் நாட்டிய பள்ளியின் இயக்குனருமாகிய கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் கலந்துகொண்டார்.

அதிதி பேச்சாளராக தென்னாடு பத்திரிகையின் ஆசிரியர் ஜீவானந்தம் சஜீவனும், வாழ்த்துரையைக் கவின்கலை மன்றக் காப்பாளர் ரஜிதா சின்னதுரையும் அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதி நிகழ்த்தினர்.

நிகழ்வில் ஆசிரிய மாணவிகள் இணைந்து "ஆடிப்பிறப்பு" பாடலை பாடினர்.

முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் ஆடிப்பிறப்பு பற்றிய காணொளியைத் தயாரித்து காட்சிப்படுத்தினார்.

அதிதிகள் இருவரும் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வின் நிறைவில் ஆடிப்பிறப்பு பாரம்பரியமான கூழ் கொழுக்கட்டை என்பன பரிமாறப்பட்டன.

# மாவிலங்கை குள வாய்க்கால் தூய இலங்கை திட்டத்தின் கீழ்!






பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் தூய இலங்கை வேலைத் திட்டத்தின் கீழ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சியில் அமைந்துள்ள மாவிலங்கை குளத்துக்கு அண்மையில் வாய்க்கால் மற்றும் மதகு என்பன பொது மக்களின் ஒத்துழைப்புடன் துப்பரவு செய்யப்பட்டன.

# பாலின சமத்துவத்தின்மை அபாயம் தொடர்பில் டிஜிட்டல் சேவைப் பட்டியல்



பாலின சமத்துவத்தின்மையின் அடிப்படையில் அதனைச் சந்திக்கும் அல்லது சந்திக்கும் அபாயத்தில் இருக்கும் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளுக்கான பல்துறை சேவை வழங்குநர்களின் டிஜிட்டல் சேவை பட்டியலை தயாரிக்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் மக்கள் நிதியத்தின் ஒத்துழைப்புடன் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மேற்பார்வையில், திருகோணமலை மாவட்ட மகளிர் அபிவிருத்தி அதிகாரி திருமதி ஸ்வர்ணா தீபானியால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யு.ஜீ.எம். ஹேமந்த குமாரவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் கூறுகையில்,

தற்போதைய காலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வன்முறைக்கு உள்ளாகும் அபாயம் மிக அதிகமாக உள்ளது. அதற்கு உரிய பொறுப்புள்ள நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு, தலையீடு மற்றும் விரைவு பதில்கள் மூலம் இந்த அபாயங்களைத் தடுப்பதற்கு மற்றும் நிகழக் கூடிய சேதத்தை மிக குறைவாகக் கொண்டு வருவதற்கு முடியும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் முதன்மை நோக்கம் திருகோணமலை மாவட்டத்துக்கு உரிய பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பங்கேற்பாளர்களின் ஒத்துழைப்புடன் பல்துறை சேவை வழங்குநர்களின் டிஜிட்டல் சேவை பட்டியலை உருவாக்குவதே ஆகும்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள், பொலிஸ் பிரிவின் மகளிர் பிரிவு அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், பெண்கள் தொடர்பான அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உள ரீதியான வலுப்படுத்தல் நிகழ்வு





தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினர் சமுர்த்தி திணைக்களத்தின் மூன்று தசாப்த கால நிறைவை முன்னிட்டு கொடிகாமம் மற்றும் வரணி சமுர்த்தி வலய பயனாளிகளை இணைத்து உளரீதியாக வலுப்படுத்தலை ஏற்படுத்தும் நிகழ்வை அண்மையில் இராமாவில் பொது மண்டபத்தில் நடத்தினர்.

இந்த நிகழ்வில் தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள், உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



# மஞ்மா நகர் பிரதேசத்தில் யானை வேலி அமைக்குக!

## பணியை விரைவுபடுத்துமாறு ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை




மட்டக்களப்பு மாவட்ட விஷேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (16) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், இளையதம்பி ஸ்ரீநாத், கந்தசாமி பிரபு ஆகியோரது பங்கேற்புடன் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விஷேட அதிதியாக, சுற்றாடல் அமைச்சர் வைத்திய கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி கலந்துகொண்டார்.

இதன்போது, சுற்றாடல் அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பல முன்மொழிவுகளை முன் மொழிந்திருந்தார்.

அதனடிப்படையில், ஓட்டமாவடி மஜ்மா நகர் பிரதேசத்தில் யானை தாங்குதலால் உயிரிழப்பு உட்பட பல சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அந்த பிரதேசத்திற்கு யானை வேலி அமைக்கப்பட்டு மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் இதற்கான நிதியை விரைவாக ஒதுக்கீடு செய்து இந்தத் தேவையைப் பூர்த்தி செய்து தருவார் என்று உறுதிமொழி வழங்கினார்.

அதேபோல், ஓட்டமாவடி பிரதேசத்தில் அமைந்துள்ள அரிசி ஆலைகள், மர அலைகள் என்பனவற்றால் சூழல் மாசடைவு, அதிக சத்தம் போன்ற பல காரணங்களால் இந்தத் தொழிற்சாலைகளை ஓட்டமாவடி பத்திரிகை தொழிற்சாலை காணிகளுக்கு மாற்றுவதற்கு எழுபது ஏக்கர் காணிகளை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

இதன்போது, சுற்றாடல் அதிகார சபை காணியை அமைச்சு வழங்குமாக இருந்தால் அதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பதிலளித்த அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, தேவையான காணிகளை ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என உறுதிமொழி வழங்கினார்.





# வடக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் பண்பாட்டுப் பெருவிழா!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலகம் கொண்டாடிய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் (15) மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் பா. ஜெயகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஷ்ம் மதிப்புறு விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினமும் கலந்து கொண்டனர்

அமரர் வேலையா ஞாபகார்த்த அரங்கில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழாவில் பல்வேறுபட்ட கலை, இலக்கிய, விழுமியங்களை உள்ளடக்கியிருந்தவை சித்திரிப்புகள் பவனியில் வருகை தந்தன.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் இருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமான நிகழ்வில் இசைச் சங்கமம், வில்லிசை, வள்ளி திருமணம் இசை நாடகம் போன்றவை இடம்பெற்றன.

மூத்த கலைஞர்களுக்கான “ஞான ஏந்தல்” மற்றும் இளங்கலைஞர்களுக்கான “இளங்கலைஞர்” விருதுகள் என்பன முதன்மை விருந்தினரால் வழங்கப்பட்டன.













# அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி முத்தமிழ் விழா

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் முத்தமிழ் மன்றம் முன்னெடுத்த முத்தமிழ் விழா நேற்று புதன்கிழமை காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி மேரி ஜெயமலர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய தமிழ் பாடப் பிரதி கல்விப் பணிப்பாளர் இ. இராஜமோகனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் அருட்சகோதரி மேரி எத்தல் வீவா தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இ. குணேஸ்வரி, கார்மேல் கன்னியர் சபை மூத்த அருட் சகோதரி திரேசாராணி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

புனித தெரேசாள் மகளிர் கல்லூரி 1946 இல் சேர் சிற்றம்பலம் கார்டினரால் உருவாக்கப்பட்டு கார்மேல் சபையினரால் நிர்வகிக்கப்பட்ட பெண்கள் பாடசாலை ஆகும்.











# நுணாவில் பொது நூலகத்தின் தேவைகள் தொடர்பில் ஆராய்வு

சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்துக்குச் சபையின் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ், உப தவிசாளர் ஞா. கிஷோர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழு நேரில் சென்று நூலக நடவடிக்கைகளை ஆராய்ந்தது.

இதன்போது நூலகத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

இதன்போது பொது நூலக புறச் சூழல்களை அழகுபடுத்தித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.








# பன்னாட்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு தின இறுதி நாள் நிகழ்வில் பரிசில் வழங்கல்

பன்னாட்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு தின இறுதி நாள் நிகழ்வும் பரிசில்கள் வழங்கலும் நேற்று (16) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

"பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுறுத்துவோம்" எனும் தொனிப் பொருளில் – சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ். பி. தவகிருபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர்களான எஸ். சிவகரன், பா. ஜெயகரன், மாகாண கல்விப் பணிப்பாளர் . கே. ஜே. பிரட்லீ , மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வட மாகாண பணிப்பாளர் ஆர். மகேஷ் யல்றொட்டா வேல்ட் விஷன் திட்ட முகாமையாளர் இ. பிரகாஷ் குமார் வேல்ட் விஷன் தொழில்நுட்ப நிபுணர் நிமால் பிரேமதிலக ஆகியோரும் பங்குபற்றினர்.

நிகழ்வில் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும், விழிப்புணர்வு நாடகம், மாணவர்களின் பேச்சு மற்றும் மாணவர்களின் விவாத நிகழ்வும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சமுர்த்திப் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.



# காரைதீவு பிரதேச சபை கன்னி அமர்வு நேற்று!







**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று புதன்கிழமை (16) புதிய தவிசாளர் சு.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

சபா மண்டபத்தில் உப தவிசாளர் முஹம்மது ஹனீபா முகம்மது இஸ்மாயீல் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மத அனுஸ்டானம் இடம் பெற்ற பின்னர் தவிசாளர் உரையுடன் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் அறிமுகம் மற்றும் உரை என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றன.

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபைக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் உறுப்பினர் சுப்பிரமணியம் பாஸ்கரன், முன்னாள் தவிசாளர் வை.கோபிகாந், சின்னத்தம்பி சிவகுமார், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் அபூபக்கர் பர்ஹான் (தேசிய மக்கள் சக்தி), மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்தில் எம்.எச்.எம்.இஸ்மாயில் ( மு.கா. முன்னாள் உறுப்பினர்) மற்றும் மாவடிப் பள்ளி வட்டாரத்தில் ஏ.ஆர்.எம்.ஹில்மி (அ.இ.ம.காங்கிரஸ்) ஆகியோர் முதல் பட்டியலில் தெரிவாகியிருந்தார்கள். சபைக்கு 04 உறுப்பினர்கள் பட்டியல் முறையில் தெரிவாகினர்.

தேசிய மக்கள் சக்தியின் இரு பெண்கள் கிருஷ்ணபிள்ளை செல்வராணி மற்றும் சவுந்தரம் சுலஸ்தனா மற்றும் மு.கா. சார்பில் எம்.என்.எம்.றனீஸ் (முன்னாள் உறுப்பினர்) மற்றும் சுயேச்சை குழு தலைவர் ஏஎம்.ஜாகீர் (முன்னாள் உப தவிசாளர்) ஆகியோர் தெரிவாகினர்.



# திட்டங்களின் நிதி, பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆளுநர் தலைமையில் ஆராய்வு!

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

ஆளணி வளம் குறைவாக இருந்தாலும், பௌதீக வளம் பற்றாக் குறையாக இருந்தாலும் மக்களுக்கான சேவையை வழங்குவதில் எந்தவொரு குறைபாடும் இருக்கக் கூடாது. எம்மிடமுள்ள வளங்களை ஒன்றுதிரட்டி அதி உச்ச சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும் இதை உறுதிப்படுத்த வேண்டியது திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு எனவும் குறிப்பிட்டார்.

சுகாதாரத் திணைக்களம், சுதேச மருத்துவத் திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் ஆகிய ஒவ்வொரு திணைக்களங்களினதும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள பிரதி ஆணையாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.










# திரையரங்குகளில் 3 நாள்களுக்கு மக்களின் விமர்சனம் எடுக்காதீர்கள்

## விஷால் வலியுறுத்தல்



திரைப்படம் வெளியான முதல் 3 நாள்களுக்கு திரையரங்குக்குள் மக்களின் விமர்சனம் எடுக்க அனுமதிக்க வேண்டாம் என்று திரையரங்க உரிமையாளர்களுக்கு நடிகர் விஷால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீகாளிகாம்பாள் பிக்சர்ஸ் சார்பில் கே.மாணிக்கம் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் ‘ரெட் ஃப்ளவர்’. ஆண்ட்ரூ பாண்டியன் இயக்கியுள்ள இப்படத்தில் விக்னேஷ் நாயகனாக நடித்துள்ளார். இதன் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினருடன் நடிகர் விஷால், இயக்குநர்கள் பி.வாசு, சுராஜ் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் கலந்துக் கொண்டார்கள்.

இந்த விழாவில் விஷால் பேசும்போது,

“பி.வாசு சார் அன்றிலிருந்து இப்போது வரை நிற்கிறார் என்றால் அவரின் படங்கள் மற்றும் அவரின் உழைப்புதான் காரணம். இப்போதெல்லாம் நிறைய பேருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள். ஆனால், சுராஜ் அவர்களுக்கு கண்டிப்பாக டாக்டர் பட்டம் தர வேண்டும். அவர் இயக்கிய படங்கள் பல பேருக்கு மெடிடேஷன். அவர் வடிவேலுவை வைத்து இயக்கிய நகைச்சுவை காட்சிகள் தான் இன்றும் பலருக்கும் மருந்தாக இருக்கிறது.

இந்த அரங்கம் நிறைந்து இருப்பது போல அரங்கம் நிறைந்த காட்சிகளாக இப்படம் ஓட வேண்டும். இங்கு சின்ன படம், பெரிய படம் என்று எதுவும் இல்லை. இந்த படத்தின் விழாவுக்கு வருவது என் கடமை. என் நண்பன் போராளி விக்னேஷுக்காக வந்திருக்கிறேன். அதற்கு காரணம் அவர் பல்வேறு கஷ்டங்கள், அவமானங்களை தாண்டி இங்கு வந்திருக்கிறார். அவர் வெற்றி பெற வேண்டும். மாணிக்கம் என்ற ஒரு பொக்கிஷம் உங்களுக்கு தயாரிப்பாளராக கிடைத் திருக்கிறார். 2025 இல் என்ன நடக்கிறது என்பதை படமாக எடுக்கவே இன்று பல இயக்குநர்கள் திண்டாடுகிறார்கள். ஆனால், இயக்குனர் ஆண்ட்ரூ 2047 இல் என்ன நடக்கும் என்பதை திரைக்கதையாக்கி படமாக எடுத்துள்ளார்.

திரையரங்க உரிமையாளர்களுக்கு ஒரு கோரிக்கை. ஒரு திரைப்படம் வெளியாகும்போது முதல் 3 நாள்களுக்கு மட்டும் திரையரங்க உரிமையாளர்கள் மக்களின் விமர்சனம் எடுக்க அனுமதிக்க வேண்டாம். வெளியில் அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். தயாரிப்பாளர் சங்கத்துக்கு ஒரு முக்கியமான கோரிக்கை. தமிழ் சினிமாவில் ஒரே நாளில் 10 படங்கள் வெளியாகிறது. எந்த படத்துக்கும் சரியான அளவில் திரையரங்குகள் கிடைப்பதில்லை. அதனால் படங்கள் வெளியீட்டை ஒழுங்குப்படுத்த வேண்டும்.

விரைவில் நடிகர் சங்க கட்டடத்தை திறக்க வேலைகள் நடந்து வருகின்றது. ஓகஸ்ட் 29 என் பிறந்த நாள். கண்டிப்பாக நல்ல செய்தி காத்திருக்கிறது. திருமண திகதியை விரைவில் அறிவிப்பேன்.” என்றார்.

# வங்க மொழி பேசும் மக்களுக்கு துன்புறுத்தல்: மம்தா பானர்ஜின் தலைமையில் போராட்டம்

பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் வங்க மொழி பேசும் மக்கள் பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதாக கூறி மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையில் நேற்று கொல்கத்தாவில் போராட்டம் நடைபெற்றது.

திரிணமூல் காங்கிரஸ் தேசிய பொது செயலர் அபிஷேக் பானர்ஜி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



இந்த போராட்டத்தையொட்டி 1,500 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். முக்கிய சாலைகளில் வாகனப் போக்குவரத்து திருப்பி விடப்பட்டது.

மேற்கு வங்க மாநிலம் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள உள்ளது. இந்த நிலையில், பிரதமர் மோடி வருகை தருவதற்கு ஒருநாள் முன்னதாக நேற்று இந்தப் போராட்டம் நடைபெற்றது. ஆனால் மம்தா பானர்ஜியின் இந்த போராட்டத்துக்கு எதிர்க்கட்சி தலைவர் சுவேந்து அதிகாரி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

வங்கமொழி பேசும் ரோஹிங்கியாக்கள் மற்றும் சட்டவிரோத வங்கதேச ஊடுருவல்காரர்களை திரிணமூல் காங்கிரஸ் கட்சி காப்பாற்றுவதற்காக இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக சுவேந்து அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

# திராவிட கட்சிகளின் செய்தி அரசியல்

## சீமான் விமர்சனம்





திராவிட கட்சிகளால் செய்தி அரசியலையே செய்யமுடியும் என்றும் செயல் அரசியலைச் செய்ய முடியாது என்றும் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் ஏற்கனவே திராவிட முன்னேற்றக்கழகத்திடம் ஒன்றரை கோடி உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அந்த ஒரு கோடி பேர் வாக்கு செலுத்தினாலே திராவிட முன்னேற் றக்கழகம் தேர்தலில் வெற்றி பெற முடியும் அப்படியெனில் ஏன் வாக் குக்காகப் பணம் கொடுக்க வேண்டும் என்று சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் திராவிட முன்னேற்றக்கழகத்திடம் இருந்து மண்ணையும், மானத்தையும் முதலில் காப்பாற்ற வேண்டும் என்று சீமான் குறிப்பிட்டுள்ளார்.

மதுபானம் வழங்காமல், உணவு வழங்காமல் தனது கூட்டத்துக்கா? அல்லது முதல்வர் ஸ்டாலின் கூட்டத்துக்கா மக்கள் வருவார்கள் என்பதற்கான பந்தயம் கட்டமுடியும் என்றும் சீமான் தெரிவித்துள்ளார்.



# சிரியா இராணுவ தலைமையகம் மீது இஸ்ரேல் படை குண்டுவீச்சு தாக்குதல்

சிரியாவின் இராணுவ தலைமையகம் மீது குண்டு வீசி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பாஷர் அல் ஆசாத்தின் ஆட்சி முஸ்லிம் கிளர்ச்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டது.

இதையடுத்து, அல் ஆசாத் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றதுடன் அதன்பிறகு ஹயத் தஹிர் அல் ஷியாம் சிரியாவின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனை விரும்பாத முன்னாள் ஜனாதிபதி அல் ஆசாத்தின் ஆதரவாளர்கள் சிரியா அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, சிரியா அரசு படைகள், அரசு ஆதரவு குழுக்கள், இஸ்ரேல் எதிர்ப்பு பயங்கரவாதிகள் மற்றும் துரூஸ் இன மக்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்வேய்தா மாகாணத்தில் தங்களின் செல்வாக்கை விரிவுபடுத்த முயன்று வருகின்றனர்.

அத்தோடு, துரூஸ் இன மக்கள் இஸ்ரேல் நாட்டு அரசுடன் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளனர் எனவே, துரூஸ் இன மக்களை பாதுகாக்கும் விதமாக இஸ்ரேல் இராணுவம் இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளது.

துரூஸ் இனத்தவருக்கு ஆதரவாக, ஸ்வேய்தா மாகாணத்தில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது அந்த வகையில், சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள இராணுவ தலைமையகம் மீது இஸ்ரேல், குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தியுள்ளது.

சிரியாவின் தகவல் அமைச்சர் ஹம்சா அல்-முஸ்தபா இது தொடர்பில் தெரிவிக்கையில்,

“ஸ்வேய்தா மாகாணத்தில் நடைபெற்ற இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் ஒரு வெற்றி அல்ல.

மாறாக இஸ்ரேல் அரசாங்கம் உள்நாட்டு பிரச்னைகளில் இருந்து திசைதிருப்பவே இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

ஸ்வேய்தா மாகாண மக்கள் இந்த நாட்டின் ஒரு தூண்களாவர் அத்தோடு அவர்களும் எங்களின் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான்.” என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் சிரியாவில் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த நான்கு நாள்களில் மட்டும் 200 மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.








# அமெரிக்காவில் 7.3 ரிக்டரில் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தின் கடற்கரையில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.3 புள்ளிகளாக, அலாஸ்கா நேரப்படி புதன்கிழமை பிற்பகல் 12:37 மணிக்கு பதிவாகியுள்ளது.

இதனால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



நிலநடுக்கத்தின் மையப்பகுதி தீவு நகரமான சாண்ட் பாயிண்டிலிருந்து தெற்கே சுமார் 87 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

அலாஸ்காவின் கடற்கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

எனினும், பிற்பகல் பிற்பகல் 2:45 மணிக்கு சுனாமி எச்சரிக்கை முற்றிலும் நீக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் உண்டான சேத விபரங்கள் குறித்து தகவல் வெளியாகவில்லை.

கனடா முரசு
வியாழக்கிழமை | 17/07/2025

## விமானத்தை கடத்திய மர்ம நபரால் பரபரப்பு

கனடாவின் வான்கூவர் சர்வதேச விமான நிலையம் அருகே ஒரு சிறிய செஸ்னா 172 விமானத்தை கடத்திய ஒருவரை ரோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ் கைது செய்துள்ளது. C02



# ஹரி ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக குரல் கொடுத்தார் கனடா பிரதமர்

**பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரும் நிலையில் அவர் மீது தமக்கு பூரண நம்பிக்கை உண்டு என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**அமைச்சர் ஆனந்தசங்கரி, தனது அமைச்சரவையில் சேருவதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினராக கனடா உள்நாட்டு பாதுகாப்பு அமைப்பான CBSA அடையாளம் காணப்பட்ட ஒருவருக்காக நிரந்தர குடியிருப்புக் கோரிக்கைக்கு ஆதரவாக கடிதம் எழுதினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவர் இந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.** C03

# விடுதலைப்புலி உறுப்பினர் குடியுரிமை பெற ஆதரவு

## அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மீது குற்றச்சாட்டு

கனடா பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி , விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினருக்கு குடியுரிமை பெறுவதற்கு ஆதரவளித்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரான செந்தூரன் செல்வகுமார் என்பவருக்கு கனேடிய குடியுரிமை வழங்குவதை ஆதரித்து ஹரி ஆனந்தசங்கரி இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2016 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கனடா எல்லை சேவைகள் நிறுவனத்திற்கு தொடர்புடைய கடிதங்கள் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹரி ஆனந்தசங்கரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இந்தக் கடிதங்களைச் சமர்ப்பித்ததாகவும்,



தொடர்புடைய நபருக்கு விடுதலைப் புலிகளுடன் அவருக்கு நேரடித் தொடர்புகள் இருப்பதாகக் கூறி, அந்நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை பல சந்தர்ப்பங்களில் அவரது குடியுரிமை விண்ணப்பத்தை நிராகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மனிதாபிமானக் கருத்தாய்வுகளையும், அவரது குடும்பம் பிரிவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாலும், செந்தூரன் செல்வகுமார் என்ற நபருக்கு நிரந்தர கனேடிய குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஹரி ஆனந்தசங்கரி சம்பந்தப்பட்ட கடிதங்களில் கோரியுள்ளார் என கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பதால், ஹரி ஆனந்தசங்கரி பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக அவர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி பயங்கரவாதத்தை ஆதரிப்பதால், அவர் தனது அமைச்சர் பதவியில் தொடர்ந்து பணியாற்றுவது சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளதாக C03




# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு கலை போட்டி

கனடா சுவாமி விபுலானந்த கலை மன்றம் கலைத் தமிழ் போட்டிகளை வழமைபோல் கடந்த ஞாயிற்றுக் கிழமை கனடா சிவிக்ஸ் நிலையத்தில் தலைவர் வ.புருசோத்தமன் தலைமை யில் நடாத்தியது .

வழமைக்கு மாறாக 87 மாணவர் கள் பேச்சு திருக்குறள் சொல்வதெழு தல் சிறுகுறிப்பு பொது அறிவு காட்சிப் படுத்தல் பண்ணிசை ஆகிய நிகழ்ச்சி களில் பங்குபற்றினார்கள்.

2009 ஆண்டிற்கும் 2019 ஆம் ஆண் டிற்கிடைப்பட்ட காலத்தில் பிறந்த சிறுவர்கள் இதில் கலந்து கொண் டார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புகள் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று அதன் பொருளா ளர் சி.உதயகுமாரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலாமன்ற போஷகர் பேராசிரியர் இ.பாலசுந்தரம் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.














## விமானத்தை...

( C01 தொடர்ச்சி)

விமானம் வான்கூவரில் தரையிறங் கிய பிறகு சந்தேக நபர் கைது செய் யப்பட்டுள்ளார் .

கைது செய்யப்படுவதற்கு முன்பு, வான்கூவர் தீவில் இருந்து ஒரு விமா னம் கடத்தப்பட்டு வான்கூவர் சர்வதேச விமான நிலையம் அருகே வான்வெளி யில் நுழைந்ததாக தங்களுக்கு தகவல் கள் கிடைத்ததாக பொலிஸார் கூறி யுள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது விமான நிலையத்திற்கு வந்த பல விமானங்கள் திருப்பி விடப்பட்டதாகவும், விமான நிலையத்தின் செயல்பாடுகள் சிறிது நேரம் நிறுத்தப்பட்டதாகவும் வான் கூவர் சர்வதேச விமான நிலைய அதி காரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் குறித்து குறித்து கனேடிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர்.






# பிராம்ப்டன் மேயர்பாக்ட்ரிக் பவுனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தவர் கைது

கனடாவின் பிராம்ப்டன் நகர மேயர் பாக்ட்ரிக் பவுன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பீல் பிராந்திய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

29 வயதான கன்வர்ஜோத் சிங் மனோரியா, மரணம் அல்லது உடல் சேதம் ஏற்படும் வகையில் மிரட்டல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுவாக விசாரணையை அறிந்த ஒரு ஆதாரத்தின்படி, மேயரின் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலமாக இந்த அச்சுறுத்தல் வந்ததாகத் தெரிய வந்துள்ளது.

அதில் அவரது மனைவியையும் 5 வயது மகளையும் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சந்தேகப்படுக்கப்படுபவர் ஸ்வீடனில் உள்ள ஒரு சர்வர் மூலம் தனது ஐ.பி. முகவரியை மறைத்துள்ளார் எனவும் வெளிநாட்டிலிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக காண்பிக்க முயற்சித்துள்ளார் எனவும் மேயர் பிரவுன் தெரிவித்துள்ளார்.

நான் சமூக பாதுகாப்பு தொடர்பான பல்வேறு விஷயங்களில் திறந்தவையாக பேசியுள்ளேன். எனவே இந்த அச்சுறுத்தல், என் கருத்துரைகளைத் தொடர்ந்து வந்ததால்தான் பொலிஸார் அதை கடுமையாக எடுத்துக் கொண்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

அச்சுறுத்தலுக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

ஆனால், கடந்த மாதம் மேயர் பவுன், இந்தியாவைச் சேர்ந்த 'லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலை' தீவிரவாத அமைப்பாக அங்கீகரிக்கவேண்டும் என்று கனடா மத்திய அரசிடம் கோரியதன் பின்னர் இந்த மிரட்டல் வந்திருக்கலாம் என சிலர் சந்தேகிக்கின்றனர்.

அதே நேரத்தில், இலங்கைத் தமிழர் சமூகத்திற்கு அவரால் வழங்கப்பட்ட ஆதரவுடன் இந்த மிரட்டலுக்கு தொடர்பில்லை என்று விசாரணை தொடர்புடைய ஒரு ஆதாரம் உறுதி செய்துள்ளது.

---

## ஹரி ஆனந்த...

( C01 தொடர்ச்சி)

ஹரி ஆனந்தசங்கரி தொடர்பில் கனடிய அரசியல் பரப்பில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு முதல், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கனடாவில் பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அமைப்பைச் சேர்ந்த ஒருவருக்காக ஆனந்தசங்கரி 2016 மற்றும் 2023 இல் கனடிய எல்லைப் பாதுகாப்பு சேவை முகவர் நிறுவனத்திற்கு கடிதம் எழுதியிருந்தார். 2023-இல் ஹரி ஆனந்தசங்கரி நீதித் துறைக்கான நாடாளுமன்ற செயலராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கடந்த வாரம் கனடா நீதிமன்றம், அந்த நபரின் கடைசி முறையீட்டையும் நிராகரித்தது.

தேசிய பாதுகாப்பும், பொது பாதுகாப்பும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் அறிவித்தது.

2023-இல் அமைச்சராக நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, இத்தகைய கடிதங்களை எழுதுவதை நிறுத்தியுள்ளேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்கள் வாக்காளர்களுக்காக ஆதரவு கடிதங்கள் எழுதுவது வழக்கமான செயலாகும் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விவகாரம் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதனால் வேறும் தகவல்களை வெளியிட முடியாது என தெரிவித்துள்ளார்.

எனினும்,கனடாவில் இயங்கி வரும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அமைப்பு ஒன்றின் பிரதானி ஷெரில் சபேரியா, இதை ஒரு முக்கிய தவறான முடிவாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு பயங்கரவாத அமைப்பில் உறுப்பினராக இருந்தவர் என எல்லைப் பாதுகாப்புச் சேவை முகவர் நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்ட ஒருவருக்கு ஆதரவு வழங்குவது எவ்வித ஏற்புடையதல்ல எனவும். இது நாடு முழுக்க பாதுகாப்பு குறித்த நம்பிக்கையை சீர்குலைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் எதிர்க்கட்சிகளும், இந்த விவகாரத்தில் ஆனந்தசங்கரி பதவியில் தொடரக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.

இது போல் கடிதம் எழுதியவர்கள், பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கவே கூடாது என எதிர்க்கட்சி செனட் தலைவர் லியோ ஹூசாகோஸ் சமூக ஊடகத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

---

## விடுதலைப்புலி...

( C01 தொடர்ச்சி)

கனடா பிரதமருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரியின் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால், இது தொடர்பில் குறிப்பிட்ட விபரங்களை வழங்குவது பொருத்தமற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஹரி ஆனந்தசங்கரி அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டதிலிருந்து இதுபோன்ற கோரிக்கைக் கடிதங்களை ஒருபோதும் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குழந்தை கனடாவில் இருக்கும் நிலையில், நபர் ஒருவரின் குடும்பம் பிரிவதைத் தடுக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட தனது கோரிக்கையாது அசாதாரணமானது அல்ல என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புக்கு ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டேன் என்றும், பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக முடிவுகளை எடுக்க மாட்டேன் என்றும் ஹரி ஆனந்தசங்கரி தொடர்புடைய அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்த விவகாரம் தொடர்பாக கனேடிய பிரதமர் இதுவரை எந்த அறிக்கையும் வெளியிடவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.